**லங்காபுர பிரதேச சபை - 2021**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

லங்காபுர பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் லங்காபுர பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவையின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவையின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட மேலதிகம் 2 இன் EG 10.1 இன் பிரகாரம் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற | ஏற்றுக்கொள்கின்றோம். | நியமத்தின் பிரகாரம் கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சொத்துக்களை கணக்கு வைக்கும் போது ஆண்டின் இறுதியில் பூர்த்தி செய்யப்பட்ட சதவீதத்தை அடிப்படையாகக் கொண்டு கணக்குகள் வைக்க வேண்டியிருந்த போதும் மீளாய்வாண்டில் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்டு நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற கட்டிடங்களின் பெறுமதி மற்றும் வீதிகள், மதகுகள் மற்றும் பாலங்களின் பெறுமதிகளை கணக்கு வைக்கும் போது பூர்த்தி செய்யப்பட்ட சதவீதம் கவனத்தில் கொள்ளப்படாமல் உடன்படிக்கைப் பெறுமதியின் அடிப்படையில் கணக்கு வைக்கப்பட்டதன் காரணமாக 11 கட்டிடங்களின் ரூபா 43,768,010 பெறுமதி மற்றும் வீதிகள், மதகுகள் மற்றும் 01 பாலம் என்பவற்றின் ரூபா 1,503,301 கணக்குகளில் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமம் - மேலதிகம் 2 இன் EG 2.7 இன் பிரகாரம் மூலதன செலவினங்கள், மானியங்களை செலுத்தும் போது உரிய சொத்துக் கணக்கிற்கு அல்லது செலவினக் கணக்கில் வரவு வைத்து கொடுப்பனவுக் கணக்கில் செலவு வைக்கப்பட்டு பெறுமானத்தேய்வு கணிப்பீடு செய்யப்பட்ட அடிப்படையின் படி விரிவான வருமானக் கூற்றில் இனங்காண வேண்டியிருந்த போதிலும் 2021 ஆம் ஆண்டிற்காக மிகையில்/ பற்றாக்குறையில் | ஏற்றுக்கொள்கின்றோம். | நியமத்தின் பிரகாரம் கணக்கீடு செய்தல் வேண்டும். |

இனங்காணப்பட்ட மூலதன செலவினம் மானியம் அந்தக் கணக்கிற்குரிய பெறுமானத் தேய்வு சதவீதத்தின் பிரகாரம் இனங்கண்டு கணக்கீடு செய்யப்படாமையினால் ரூபா 1,419,651 அதிகரித்து மூலதன செலவின மானியமாக இனங்காணப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த அளவினால் வருமானம் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.6.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட கணக்கீட்டு கொள்கை இலக்கம் 3.5 இன் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமானத்தேய்வு செய்தல் சொத்தொன்றின் ஆயுட்காலம் முழுவதும் குறைந்து செல்லும் மீதி முறைமையில் அதில் குறிப்பிடப்பட்ட சதவீதத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டதாக குறிப்பிடப்பட்ட போதிலும் ரூபா 29,556,148 தொகையான வருடாந்த பெறுமானத்தேய்வு பெறுமதி கணிப்பிடும் போது மேற்குறிப்பிடப்பட்ட முறைமைக்கு புறம்பாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். குறைந்து செல்லும் மீதி முறையில் பெறுமானத்தேய்வு செய்யும் போது சொத்தொன்றின் கிரயத்தில் வருடாந்தம் பெறுமானத்தேய்வு விகிதம் கணிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2021 ஆம் ஆண்டின் ஆரம்ப மீதியை பயன்படுத்தியமையால் பெறுமானத்தேய்வு பெறுமதி மாற்றமடைந்திருந்தது. | கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம் கணக்கீடு செய்தல் வேண்டும். |

### 1.6.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு இரத்துச் செய்யப்பட்ட இரண்டு செயற்திட்டங்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக வீதிகள், மதகுகள் மற்றும் பாலங்களின் பெறுமதி ரூபா 999,521 இனால் அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | நியமத்தின் பிரகாரம் கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டிற்காக அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டங்களின் நடைமுறை வேலைகளின் பெறுமதி ரூபா 1,156,153 மற்றும் வேலை பூர்த்தி செய்யப்பட்ட வீதிகள், மதகுகள் மற்றும் பாலங்களின் பெறுமதி ரூபா 492,762 தொகை நிதிக்கூற்றுக்களில் கைவிடப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | மீளாய்வாண்டிற் குரிய நிலையான சொத்துக்களை இனங்கண்டு பூர்த்தி செய்தல் அடிப்படையில் கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (இ) | தேறிய சொத்துக்கள் ∴ உரிமை மூலதன □□□□□□□□□□□ கூற்றில் மிகையோ அல்லது பற்றாக்குறையோ உள்ளடக்கப்படாத மூலதன செலவினப் படி 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ரூபா 82,123,780 ஆக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளபடியான பெறுமதி ரூபா 126,709,351 ஆக இருக்க வேண்டியிருந்தமையால் ரூபா 44,585,570 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. அந்த அளவினால் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சொத்துக்கள் | ஏற்றுக்கொள்கின்றோம். | மீளாய்வாண்டிற் குரிய மூலதன □□□□□□□□□ □□ சரியாக நிதிக் கூற்றுக்களில் இனங்காணல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் இனங்காணப்படாத மூலதன செலவின அளவு அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்ததுடன் விரிவான வருமானக் கூற்றில் ஏனைய விரிவான வருமானத்தில் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு இருப்பு பதிவேட்டை பரீட்சித்த போது ரூபா 417,879 பெறுமதியான இருப்பு நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளில் உள்ளடங்காமையின் காரணமாக இருப்பு ரூபா 417,879 குறைந்து காணப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றோம். | பதிவேடுகளை நாளதுவரையாக்கி சரியான பெறுமதி கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (உ) | சமர்ப்பிக்கப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்றில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காசு மற்றும் காசுக்குச் சமமானவைளின் பெறுமதி ரூபா 5,599,613 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றக்கொள்கின்றோம். | சரியான பெறுமதியை இனங்கண்டு கணக்கு வைத்தல் வேண்டும். |

### 1.6.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் நேரொத்த அறிக்கைகளின் பிரகாரம் 06 கணக்கு விடயங்களில் பெறுமதி ரூபா 722,617 ஆன இணக்கமின்மைகள் காணப்பட்டது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நேரொத்த அறிக்கைகளை ஒப்பீடுசெய்து சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 7,524,216 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 13,751,417 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| வாடகை<br>---------------<br>மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட 2003-2014 காலப்பகுதியில் சபைக்குச் சொந்தமான ஆதனங்கள் வாடகைக்கு வழங்கல், 27 அலகுகளிலிருந்து பெறவேண்டிய ரூபா 1,785,816 வாடகை, 2022 ஒக்தோபர் 01 ஆந் திகதி வரையிலும் 10 வருட காலத்திற்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாது காணப்பட்டதுடன் இந்த வாடகையை அறவிடுவதற்காக சட்டரீதியான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபைக்கு அறவிட வேண்டிய நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | நிலுவை வருமானத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |